சுருக்கம்

பொதுப்பணித்துறை – கட்டடம் – 2009–2010 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், பொதுப்பணித்துறை வளாகத்தில், 2 உதவிப் பொறியாளர்களுக்கு குடியிருப்பு கட்டுதல் – ரூ.19.49 இலட்சம் மதிப்பீட்டில் நிலை நிதிக்குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது – நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (ஒப்2)த்துறை

அரசாணை (நிலை) எண். 160

நாள் : 7.8.2009
ஆடி – 22
திருவள்ளுவர் ஆண்டு 2040

படிக்க :

1 தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை 5 கடித எண். உசெபொ/தொ.நு.12/52640/2007, நாள் 19.1.2009.
2 அரசு கடித எண். 75349/நிதி (வசெ II)த்துறை /2009, நாள் 21.5.2009.
3 தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை–5 கடித எண்.உசெபொ/டி12/22358/2009, நாள் 24.6.2009.

---

ஆணை:

தலைமைப் பொறியாளர் (கட்டடம்), அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், பொதுப்பணித்துறை வளாகத்தில், 2 உதவிப் பொறியாளர்கள் குடியிருப்பு கட்டும் திட்டத்திற்கு ரூ.19.49 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை அவர்கள் தமிழக சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட உறுதி மொழி எண்.100/2008ன்படி, மேட்டுப்பாளையம் பொதுப்பணித்துறை வளாகத்தில் குடியிருப்புகள் கட்டும் பணிக்கான கருத்துரு, பகுதி–II திட்டம் 2009–2010ன் கீழ் சமர்ப்பிக்கப்படுகிறது என்றும், உதவிப் பொறியாளர்களுக்கு 2 குடியிருப்புகள் 150 சதுர மீட்டரில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது என்றும், இப்பணிக்கு தேவையான நிலம் உள்ளது என்றும், இம்மதிப்பீடு 2009–2010ஆம் ஆண்டுக்கான கட்டடப் பரப்பு விலைவிகிதப்படி தயாரிக்கப்பட்டு, 2010–2011ஆம் ஆண்டிற்கான விலை ஏற்றத்துடன் இம்மதிப்பீட்டுத் தொகை ரூ.19.49 இலட்சம் ஆகும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட திட்டத்தினை 2009–2010–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், பொதுப்பணித்துறை வளாகத்தில், 2 உதவிப் பொறியாளர்கள் குடியிருப்பு ரூ.19.49 இலட்சம் மதிப்பீட்டில் 2009-2010ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

> “4059 - பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு – 01 – அலுவலகக் கட்டடங்கள் – 051 கட்டுமானம் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II மாநில திட்டம் JJ பொதுப்பணிகள் – 16 பெரும் பணிகள். (த.தொ.கு. 4059 – 01 – 051 – JJ – 1605)”

5. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை அவர்களால் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு அனுப்பப்பட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. மதிப்பீட்டின் ஒரு பிரதி தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களுக்கு திருப்பி அனுப்பப்படுகிறது.

6. தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்கள் மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.குறிப்பு எண்.36102/பொ.ப. I/2009, நாள் 30.6.2009ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை 5.(இணைப்புடன்)
கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், ஈரோடு–11.
செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், கோம்புத்தூர்.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை– 5.
மாநில கணக்காயர் (கிழக்கு), சென்னை–18/35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
<u>நகல்:</u>
நிதித் (பொ.ப. I) துறை, சென்னை–9.
பொதுப்பணித் (சி.பா.1) துறை, சென்னை –9.
இ.கோ /உதிரி

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்